www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -6

ந.க.எண்.023203/வி2/இ1/2024, நாள்22.05.2024.

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர்/மேல் நிலைப் பள்ளிகள் மற்றும் பகுதி நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கான 2024-25 ஆம் கல்வியாண்டிற்குரிய பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், பள்ளிகளுக்கு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. சென்னை-6, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேலாண்மை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.10301/Pur-1/2023, நாள்.15.05.2024.
2. அரசுக் கடிதம் எண்.580/வ.செ-1/2024-2, பள்ளிக் கல்வித் துறை நாள்.02.05.2024.

------

2024-25 ஆம் கல்வியாண்டில் பள்ளி திறக்கும் நாளன்றே பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப்புத்தகம் மாணவ/மாணவியருக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசு தலைமை செயலர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பார்வை 2 ல் காணும் அரசுக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் ஆகியவை விநியோக மையங்களிலிருந்து 31.05.2024 –க்குள் பள்ளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு வழங்கும் போது கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

- ❖ 2024-25 ஆம் கல்வியாண்டிற்கு மாவட்டக்கல்வி அலுவலர்களிடமிருந்து (இடைநிலை) இவ்வியக்ககத்திற்கு அனுப்பப்பட்ட தேவைப்பட்டியலின் அடிப்படையில் நோட்டுப்புத்தகம் மற்றும் பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை பெறப்பட்டுள்ளதை மாவட்டக்கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ❖ 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், பெறப்பட்ட விவரத்தினை இருப்புப் பதிவேட்டில் (Stock Register) சார்ந்த அலுவலர்களால் உரிய பதிவுகள் மேற்கொண்ட பின்பு பள்ளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.
- ❖ பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்படும்போது வழங்கப்பட்ட விவரத்தினை வழங்கல் பதிவேட்டில் (Distribution Register) பதிவு செய்யப்பட வேண்டும்.
- ❖ பள்ளித் தலைமையாசிரியர்களிடம் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் பள்ளிகளுக்கு தேவையான அளவில் வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்து கையொப்பம் பெற்று மாவட்டக்கல்வி அலுவலக கோப்பில் பராமரிக்க வேண்டும்.
- ❖ விநியோக மையங்களிலிலிருந்து சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) மூலம் பள்ளிகளுக்கு பாடப்புத்தகங்கள்,

www.Padasalai.Net

நோட்டுப்புத்தகங்கள் தேவைப்பட்டியலின் அடிப்படையில் வழங்கப்படுகிறதா என்பதை முதன்மைக்கல்வி அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

- ❖ மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) மூலம் கோரப்பட்ட தேவைப்பட்டியலை விட கூடுதல்/குறைவாக பெறப்பட்டால் இவ்வியக்ககத்திற்கு உடனடியாக முதன்மைக்கல்வி அலுவலர்கள் தெரிவிக்க வேண்டும்.
- ❖ முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்குத் தேவையான பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் பெறப்படவில்லை எனில் வேறொரு மாவட்டத்தில் கூடுதலாக பெறப்பட்டிருப்பின் அவற்றைப் பெற்று தேவையான பள்ளிகளுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ மேற்கண்டவாறு நடவடிக்கை மேற்கொண்ட பிறகும் தேவை இருப்பின் இவ்வியக்க வி2/இ பிரிவு மின்னஞ்சல் (v2section2022@gmail.com and Dseesection@gmail.com) முகவரிக்கு உடனடியாக தெரிவித்து விட்டு, அது சார்ந்த விவரங்களை இணை இயக்குநருக்கு (தொழிற்கல்வி) அலைபேசி வழியாக உடன் தெரிவிக்க வேண்டும்.
- ❖ 2024-25 ஆம் கல்வியாண்டில் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் மாணவ/ மாணவியருக்கு வழங்கப்படும் வரை பள்ளிகளில் பாதுகாப்பாக வைக்குமாறு தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
- ❖ பழைய கட்டிடங்கள் மற்றும் மின்கசிவு மழை மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாத வகையில் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.
- ❖ பள்ளித் திறக்கப்படும் நாளன்று மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள், நோட்டுபுத்தகங்கள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்புமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- ❖ பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட விவரத்தை உடனுக்குடன் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்ய பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு முதன்மைக்கல்வி அலுவலர்கள் அறிவுறுத்த வேண்டும்.

பள்ளிக் கல்வி இயக்குநர்
22/5/24

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

இணைப்பு: திட்டம் சார்ந்த அரசாணைகள்